மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத் தமிழ்

பதிப்பாளர்

த. தீபலட்சுமி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத் தமிழ்

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
த. தீபலட்சுமி

நெறியாளர்
முனைவர் ய. மணிகண்டன்
விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

2007

"சுவடியியலும் பதிப்பியலும்"

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பேடு எண்:

நெறியாளர் சான்றிதழ்

ய. மணிகண்டன்,
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **"சுவடியியலும் பதிப்பியலும்"** பட்டயப்பேற்றிற்காக **'மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்'** என்னும் தலைப்பிலான சுவடியை **த. தீபலட்சுமி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(ய. மணிகண்டன்)

நாள்: - - 2007
இடம்: சென்னை-5.

பதிப்பாளர் உறுதிமொழி

த. தீபலட்சுமி
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் '**மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்**' என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

(த. தீபலட்சுமி)

நாள்: - - 2007
இடம்: சென்னை-5.

உள்ளடக்கம்

	பக்கம்
நன்றியுரை	
பதிப்புரை	001
செய்யுள்	006
பின்னிணைப்பு	
செய்யுள் முதற்குறிப்பகராதி	106
துணை நூற்பட்டியல்	111

நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் சுவடியியல் பட்டய வகுப்பில் சேர வாய்ப்பளித்து சுவடியியல் பட்டயப் பயிற்சி வகுப்பில் சிறப்பான முறையில் பயிற்சி கொடுத்த தமிழ் இலக்கியத்துறை **பேராசிரியர் வீ. அரசு** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியை எம்முறையில் படித்து யாப்பு பிரித்து பதிப்பிக்க வேண்டுமெனப் பயிற்சியளித்தும், இவ்வகுப்பு தொடர்பாக நூலைப் பதிப்பித்தால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கம் கொடுத்து, ஊக்கமளித்து வழிகாட்டிய நெறியாளர் **முனைவர் ய.மணிகண்டன்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் படிப்பிற்கு சுவடியை கொடுத்து உதவிய சென்னைப் பல்கலைக்கழக அரசினர் கீழ்த்திசை சுவடி நூலக காப்பாளர் **சு. சௌந்தரபாண்டியன்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியை படித்து, யாப்பு பிரித்து, அச்சு வடிவமாகக் கொண்டு வருவதற்கு உதவிய எனது **சகதோழியர்களுக்கும்,** என் நன்றியைத்

தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலினை செம்மையாய் பதிப்பிக்க உதவிய என் தோழர் **எ. பச்சையப்பன்** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அனைத்து வகையிலும் ஆதரவு கொடுத்து ஊக்கமளித்து வரும் என்னுடைய **தாய், தந்தை** மற்றும் **உடன்பிறந்தோர்.** அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தேவைப்படும் பொழுதெல்லாம் கணினி பயன்படுத்திக் கொள்ள அனுமதி தந்து புத்தக வடிவத்திற்கு காரணமாக இருந்த **டுடே கிராபிக்ஸ்** நிறுவனத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

த. தீபலட்சுமி

பதிப்புரை

"மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்" என்னும் தலைப்பிலான இந்நூல் "திருமாலை" குழந்தையாகப் பாவித்து பத்துப் பருவங்களாக பிரித்து பாடப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவற்றில் 109 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இதில் நான்கு செய்யுட்கள் கட்டளைக் கலித்துறையாலும் ஒரு செய்யுள் வெண்பாவினாலும் இயற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 104 பாடல்களும் கழிநெடில் ஆசிரிய விருத்தங்களால் ஆனவை. இந்நூலில் புராணச் செய்திகள் மிகுதியாக காணமுடிகிறது. இந்நூல் ஆசிரியரின் ஆசிரியர் பெயர் "பட்டர் ரெகுநா தாசாரியர்" என்பதை ஆசிரியர் துதியின் மூலம் அறிய முடிகிறது.

பெயர்க் காரணம்

மகரம் என்றால் சுறாமீன், சுறாமீனைப் போன்ற வடிவிலான குழையினை காதில் அணிகளனாய் அணிந்துள்ளதால், "திருமாலை" மகர நெடுங்குழைக்காதர் என்று கூறுகின்றார், ஆசிரியர்.

இதில் இவரது ஆசிரியரைப் போற்றி துதிப்பாடல்களை இயற்றியுள்ளார். காப்புப் பாடல்களாக பதினான்குப் பாடல்கள் நம்மாழ்வார், சரஸ்வதி, ஆண்டாள், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டிரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை யாழ்வார் இராமானுசர் ஆகிய பதின்மூன்றுபேர் மீதும் பாடப்பெற்றுள்ளன.

பிள்ளைத் தமிழ் நூல்களில் காப்புப் பாடல்கள் பெரும்பாலும், "பாட்டுடைத் தலைவனை" காக்குமாறு இறைவனை நோக்கி வேண்டுவனவாய் அமையும். ஆனால் இவற்றில் உள்ள காப்புப் பாடல்களோ இந்நூலினை காக்குமாறு வேண்டப்பெற்றுள்ளன.

எஞ்சியுள்ள ஒன்பது பருவங்களான செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவப்பாடல்கள், பாட்டுடைத் தலைவனாக விளங்கும் திருமாலின் செயற்கரிய செயல்களும் குறும்புத்தனங்களும், அவரது அழியா அழகினையும் மிக நேர்த்தியாக வருணனை செய்யப்பட்டுள்ளன.

பிள்ளைத்தமிழின் இலக்கணம்

தான் விரும்பிய தலைவனையோ, அரசனையோ, கடவுளையோ, குழந்தையாக பாவித்து பத்துப் பருவங்களாக பிரித்து ஒரு பருவத்திற்கு பத்து பாடல்கள் வீதம் மொத்தம் நூறு பாடல்கள் பாடப்பெறும்.

பிள்ளைத் தமிழின் பத்து பருவங்கள்

காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பனவாகும். இவை குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரை இரண்டு மாதத்திற்கு ஒரு பருவமாக மொத்தம் பத்து பருவமாக பிரித்துப் பாடப்படுகின்றன. இதனை,

சாற்றிய காப்ப தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை போற்றரிய
அம்புலியே ஆய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து

என "வெண்பா பாட்டியல்" என்ற இலக்கண நூல் பிள்ளைத் தமிழின் பத்து பருவங்களை ஒரு வெண்பாவின் மூலம் விளக்குகிறது.

பெண்பாற் பிள்ளைத் தமிழில், இறுதியில் உள்ள மூன்று பருவங்களை நீக்கி, கழங்கு, அம்மானை, ஊசல் என இம்மூன்று பருவங்களை அமைத்துப் பாடுவர்.

பிள்ளைத்தமிழில், "அம்புலிப்பருவம்" பாடுவது கடினம் என்பர். அதனாலே "புலவர்க்கு அம்புலி புலியாம்" என்பர். இதனை சாம, பேத, தான, தண்டம் என நான்கு வழிகளாற் பாடப்படுகின்றன.

பிள்ளைத் தமிழ் நூல்கள் பெரும்பாலும் "ஆசிரிய விருத்தங்களால்" ஆனவை.

பிள்ளைத்தமிழின் வளர்ச்சி

"குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற தொல்காப்பிய நூற்பா பிள்ளைத்தமிழ் வளர்ச்சியின் முன்னோடி எனலாம்.

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான இப்பிள்ளைத் தமிழ், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், அற இலக்கியங்கள் ஆகியவற்றில் ஆங்காங்கே அவற்றின் கூறுகளை காணமுடிகிறது.

பக்தி இயக்க காலத்தில் அவை ஒரு முழுமையான இலக்கியமாக உருவெடுக்கின்றன. கண்ணனை குழந்தையாகப் பாவித்து தாலாட்டும் பெரியாழ்வார் பாடல்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் எழுதிய "இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே காலத்தால் முற்பட்டது" என்பர்.

குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் பகழிக்கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையான் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் ஆகியனவும், அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ் திருநாவுக்கரசர் பிள்ளைத் தமிழ் முதலியவை புகழ்பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்களாகும்.

புலவர்களை பாராட்டும் வகையில் பிள்ளைத் தமிழ் நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. பாரதிதாசன் பிள்ளைத்தமிழ், பாரதியார் பிள்ளைத் தமிழ் மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ், திரு.வி.க. பிள்ளைத் தமிழ், கம்பன் பிள்ளைத்தமிழ் போன்றவை தோன்றியுள்ளன.

புலவர் மட்டுமின்றி அரசியல் தலைவர்கள் மீதும் பிள்ளைத் தமிழ் பாடப்பட்டுள்ளன. எம்.ஜீ.ஆர். பிள்ளைத்தமிழ், கலைஞர் பிள்ளைத் தமிழ், ஜெயலலிதா பிள்ளைத் தமிழ், காமராசர் பிள்ளைத் தமிழ், அறிஞர் அண்ணா பிள்ளைத் தமிழ் என்பன.

இவ்வாறு பிள்ளைத் தமிழ் நூல்கள் காலந்தோறும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதுவரை ஏறத்தாழ 150 பிள்ளைத் தமிழ் நூல்கள் காணப்படுகின்றன.

மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத் தமிழ்

ஆசிரியர் துதி

1. *சுடர்விடு கமலத் திருமுக மண்டல*
சோபையு மண்டல மேல்(த்)
துகளறு திருமண் காப்பழ் கும்திரீ
சூரண விலட்சணமும்
கடல்மடை நின்று திறந்தது போலக்
கருணை சுரந்தொழுகும்
கண்களும் வேதத் திருவாய் மொழியுணர்
காதுங் கனிவாயும்
வடவரை மேலிரு சுடரென ஆழி
வலம்புரி யும்திகழு
மந்தரத் திண்புய முந்திரு மார்பும்
மருவிய முந்நூலும்
படமிசை நடமிடு மிருபத மும்தொழு
பாக்கிய மெனக்கருள்வாய்
பட்டர் ரெகுநா தாசா ரியனெம்
பரமா சாரியனே

கட்டளைக் கலித்துறை

2. கிட்டாப் பரம பதந்தரு ஞானத்தின் கேள்விதரு
மட்டா விசாரத்தினறி மறிநோருக் கெல்லாம்
கட்டாணி முத்தம் ரெகுநாதா சாரிபன்* கா......
மட்டார் கமலத் திருப்பாத மான மகத்துவமே.

3. ஊருக்கு மாறுமுகத் தோனொடைம் முகத்தோ
னுக்குமுப்
பாருக்கு முப்பத்து முக்கோடி தேவர்க்கும் பார்க்கில்
மறை
வேருக்கும் நான்குமுகத் தோன்றனக் கும்வியன்
றிசைக்கு
ஆருக்குத் தானந் திருபேரை வல்லிக் கடைக்கலமே

4. மருவல்லி செண்பகப் பூவல்லி மேனி மணங்கமழு
மொருவல்லி வள்ளைக் குழையூரு தாவடி யோடும்
விழித்
திருவில்லி நங்குலநா தனுக்கேற்றுச் சிறந்த வின்பம்
அருள்வல்லி சீர்த்தென திருப்பேரை வல்லிக்
கடைக்கலமே

வெண்பா

5. சொற்றோறுந் தேனொழுகுஞ் சொல்லும்
மரிமளிக்குங்
கற்றோர்கள் நாவும் கனியுமே - முற்றுமொரு
மாவலிபால் மூவடிமண் வாங்குந் திருப்பேரைக்
காவலவன் பிள்ளைக் கவி.

* கிதைவு

காப்பு பருவம்

நம்மாழ்வார்

6. "பூமாது குடிகொண்டு வீற்றிருந் தரசுபுரி
பொற்புலவு பத்மாசனப்
பொழி கருணை யொடுபெருகி ஞானவெள்
ளத்தலை
புரட்டுதிரு முத்திரைக் கைக்
கோமானை யெழுதரிய சதுமறையு மள்ளிக்
கொழித்துவண் டமிழ்ப்படுத்திக்
கூறுதிரு வாய்மொழியோர் நாலா யிரஞ்செய்த
குருகை முனி யைப்பரவுதும்
தேமா நறுங்கனித் தேன்மதகி னூடுபாய்
திருவழுதி வளநாடனைத்
தென்திருப் பேரைநகர் காவலனை நூற்றெண்மர்
சிந்தைகுடி கொண்டிருக்கும்

மாமாலை வரணன்வந் தடிபரவு மாழிநீர்
வண்ணனைப் புயல் வண்ணனை
வானப்பி ரானைநங் குலநாத னைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே"

சரசுவதி

7. அஞ்சிறைய வரிவண் டுழக்கிக் கணைக்கால்
அசைத்துப் பொலன்றாதளைந்
தடைகிடந் தாலித்து வாய்மடுத் துத்துதைந்
தளிநறவு கூட்டுண்ணமென்
பிஞ்சுமடன் முகைமுறுக் கவிழும் வெண்டாமரைப்
பீடத்தி னினிதி ருக்கும்
பெடையோதி மஞ்செஞ்சொன் மடமாது
வெண்ணிறப்
பெண்ணிரு தாடுதிப்பாம்
பஞ்சனைய பரிபுத் தளிரடித் துடியிடைப்
பணைமுலைக் கனிவாய் மொழிப்
பைந்தொடிச் சீதையை மணம்புணர் மிதிலையம்
பதிபுகுந் தாதிசனகன்
செஞ்சிலை யறுத்தமக ரக்குழைக் கடவுளைத்
திருவழுதி வளநாடனைத்
தென்திருப் பேரைநகர் காவலனை வாழ்த்திமென்
செந்தமிழ் சொற்றழையவே

ஆண்டாள்

8. மண்மகளு மாய்ப்பின்னை மடமகளு மாய்மிதிலை
வருசனக னுககு மகளாய்
மங்கலச் சொற்றிருப் பல்லாண்டு செம்பவள
வாய்திறந் தோதினோன்றன்
பெண்மகளு மாய்வந் தரங்கேசன் முதலைந்
பேருக்கு மொருதேவியாய்ப்
பெயர்பெற்று மாலைசூ டிக்கொடுத் தருளிய
பிராட்டியை வணங்கல் செய்வாம்

தண்மதியி னகடுதொடு மாடமா ளிகைநெடிய
நமணியப் பொற் குன்றமும்
சதுமறைக் குரியவேள் வியும்யாக சாலையும்
சன்னதியி னூற்றெண்மரும்
கண்மணி யெனத்தகைய பிள்ளைக் குழாமுமலி
காவு சூழ் பேரையூரன்
கருணையொடு வருணனடி பரவுமக ரக்குழைக்
கடவுள்சொற் றழைய வென்றே

பொய்கையாழ்வார்

9. பாரரா வணனெனும் படுபழிக் கஞ்சாத
பாவிகொலை களவு கபடம்
பழகுபா தகன்மவுலி யொருபதுந் துகள்படப்
பண்டுகோ தண்டம் வாங்கும்
வீரமே கந்திருக் கோவலூ ரிடைகழியன்
வெளிநிற்ப வொவ்வொருவர் மேல்
மிகநெருக் குண்டபுகழ் மூவரிற் பொய்கையார்
மென்சரண மஞ்சலி செய்வாம்

தாரைவேல் விழிபாய வாலிமார் புருவவொரு
சரம்விடுத் துக் கொன்றவன்
தம்பிக்கு மகுடம் கவித்தர சளிக்கின்ற
தாமோ தரக்குழக ணைப்
பேரையா திபனைநங் குலநாத னைத்துழாய்ப்
பெம்மானை யம்மானையே
பேசுஞ் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிக்குள்ள
பேதமை பொறுத்தருளவே”

பூதத்தாழ்வார்

10. "ஆரணப் பொருணான்கும் யோகமோ ரெட்டுநூ
லைந்தொடைந் தெட்டுநியமம்
ஆறுதொண் ணூற்றாறு தத்துவஞ் சித்தியெட்
டைம்புல னடக்கி ஞானக்
காரணச் சுடர்விளக் கேகொண்டி யாவுமொரு
கரை கண்டுபுகழ் கொண்ட சொற்
கருணா கரக்குரிசில் உயர்பூதத் தார்மலர்
கழலிணை வணங்கல் செய்வோம்

பூரணக் கலைமதியின் நிலவொழுக வாம்பல்மென
புரிமுறுக் கவிழ் வாவியம்
புனல்படியும் வன்கரா வதுவந் திழுக்கவப்
பொழுதாதி மூலமென்றே
வாரணப் பகடலறி வீரிடக் காத்தருள்செய்
மையாழி நீர்வண்ணனை
வானப்பிரானைநங் குலநாத னைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே"

பேயாழ்வார்

11. தெளிக்கும் கொழும்பிரச மூற்றிருக் குங்கலுழீ
 திரைமண்டி மடுநிறையவே
தேக்கெறியும் வெள்ளப் பெருக்கிற் பொலன்றது
 சிந்தக் குடைந்துபம்பிக்
களிக்குஞ் சிறைச்சுரும் மிசைமு ரல முலைகவிண்ட
 கடிகமழ் பசுந்தண்டுழாய்க்
கடவுள் திருவந்தாதி புகலுமயி லையர்கோன்
 கழற்கால் வணங்குதுமியாம்

துளிக்குந் திரைப்பொருநை மதகினொலி யும்பாழஞ்
 சுருதிமறை யவர்க ளொலியுஞ்
சொல்லரிய பிள்ளைக் குழவொலியும் மங்கலத்
 தூயமுர சத்தொடு பழீஇ
மளிக்குந் திருப்பேரை மணிவண்ண னைப்புயலை
 மகரக் குழைக்கடவுளை
வானப் பிரானைநங் குலுநாத னைப்புகழும்
 வண்டமிழ்ச் சொற்றழையவே.

திருமழிசையாழ்வார்

12\. கொந்தார் பசுந்துளவு பழுதுதள் ளிச்செழுங்
        தளிர்நறுந் தொடையல் சேர்த்துக்
குலவுமணி முடிமீது கைபுனைந் தாழிமால்
        குரைகழ லிணங்கத்திரு
வந்தாதி யொடுதிருச் சந்தம்நூற் றிருபதையும்
        அமுதூறு திருவிருத்த
மாகச்சொன் மாலையணி யோகப்பிரான் மழிசை
        யாதிபனை யேபரவுதும்

நந்தா வளம்பெற்ற திருவழுதி நாடும்வள
        நகரமு முரிய கோமான்
நாரணன் பூலோகக் காரண னச்சுதா
        நந்தகோ விந்தன்முற்றும்
வந்தா தரித்துவரு ணன்பரவு மாழிநீர்
        வண்ணனிகர் முகில்வண்ணனம்
வானப்பி ரானதிர் வளைக்கைமக ரக்குழை
        மாதவன் சொற்றழையவே."

குலசேகராழ்வார்

13. வள்ளவாய் நெகிழத் துளிக்கும் பசுந்தேறல்
மலர்மங்கை திகழ்வஞ்சியும்
வளமைதரு குடநாடும் ஆன்பொருநை யுங்கொல்லி
வரையுமுரி மைச்சேரர்கோன்
புள்ளவா வுறுநீல மாலிகை கிடந்தபுய
பூதரன் குலசேகரன்
பொருசிலையை நெடியவட வரைமிசை
பொறித்தவன்
புகழ்வேந்த னினிதுகாக்க

அள்ளல்வாய்ப் பழனத் தடந்தோறுஞ் சுரிசங்கம்
அகடுளைந் தீன்ற முத்தும்
அம்பொற் பசும்பாளை தளையவிழ்க் கும்கமுகின்
அணிமுத்தும் நிலவு காலக்
கள்ளறா நறுமலர்க் குமுதம்விரி பேரைவரு
கருணா கரக் குரிசிலைக்
கடவுளைக் குலநாத னைப்புகழ்ந் தேற்றுமென்
கவிதையின் சொற்றழையவே

பெரியாழ்வார்

14. *விடங்காலும் வாளரா வரசுக்கு முணர்வரிய*
மிக்கசங் கத்தமிழினால்
மீனவன் மதிப்பவரி யாசன மிருந்தினிது
வென்றுழு தூர்மதுரையின்
அடங்காத பரசமய மதமறுத் துக்கிழி
அறுத்துவே ழப்பிடரிருந்
தாழிமா லைக்கண்டு விழிபா டும்பெரிய
ஆழ்வார் தமைத் துதிப்பாம்

தடங்கால் கடுக்கக் கடத்தினிற் கல்லுருத்
தவிரமுனி பின்னடத்து
சரணபங் கேருகத் துகளழிக் கும்பசுந்
தண்டுழாய்க் கொண்டல் கேணிக்
கிடங்கான திறம்பகட் டிளவாளை துள்ளமைக்
கெண்டைவிளை யாடுபுனல்சூழ்
கெழுதகைய தென்பேரை வளமலி தருந்துயர்
கேசவன் சொற்றமைழயவே."

தொண்டரடிப் பொடியாழ்வார்

15. பண்டா லிலையற் கண்டுயில் ஞான
    பராபரர் காவிரி நீர்
படியு மரங்கற் குச்சொன் மாலை
    பணிந்தடி யிற்சூட்டி
வண்டார் துளபத் தொடைமுடி சூட்டி
    வணங்குந் தவராசன்
மண்டங் குடிவாழ் தொண்டரடிப் பொடி
    வரமுனி யைத்தொழுவாம்

குண்டா ருத்திப் புனலனல் குமிறக்
    கோதண்ட டம்வாங்கிக்
குழைய வளையத்தொரு பகழி தொடுத்தருள்
    கோமே தகம்வாசத்
தண்டா மரைமல ரும்பே ரையல்வரு
    தாமோதரர் தூயர்
தமிழ்தெரி பிள்ளைக் கவிவழு வ·தெழு
    தரணியி னிலை பெறவே"

திருப்பாணாழ்வார்

16. வச்சிரக் குலிசபதி முனைவரிமை யாதசது
மறைக் கடவுள் மழுவலாளன்
வந்தடி பணிந்து தொழு மெந்தைக்கு முத்திதரும்
வைகுண்ட பதவியானுக்
கச்சுதப் பச்சைமா லுக்கரு மறைப்பொருட்
கருமணிக் கண்மலர்படைத்
தமல னாதிப்பொரு ளுரைக்கின்ற குரிசில்பா
ணாழ்வாரையே பரவுதும்

கச்சறப் பொருமிப் புடைத்து சினத்துக்
கனத்தடி பரந்துவிம்பிக்
கண்கறுத் தமிர்தம் பொதிந்தகுங் குமமுலைக்
கற்புடைச் சீதையாளே
நச்சிறற் சிலைவளைக்கும் பசுந்தண் டுழாய்
ராமாவ தாரதீர
நாராயணன் வழுதி நாடன்நங் குலநாதன்
நற்றமிழ்ச் சொற்றழையவே

திருமங்கையாழ்வார்

17. சிறியதிரு மடல்பெரிய திருமடற் றிருமொழி
செழுந்தமிழ் நெடுந்தாண்டகம்
சிறக்கின்ற சொற்குறுந் தாண்டகம் விதிமுறை
தெளித்தவெழு கூற்றிருக்கை
நறியதுள வணியுமுகி லுக்குரைக் குமங்கை
நாற்கவிப் பெருமானைமுன்
நான்மறைப் பொருளுக்கு மெட்டா வரும்
பொருளின்
நாற்பொருள் கவர்கள்வனை
பறிமுதல் திரும்பக் கொடாதனைத் துந்திருப்
பணிசெய்யும் புகழ்வேந்தனைப்
பலகாலும் நெஞ்சில்வைத் தவனடிக் கமலமலர்
பரிவொடு பணிந்தேத்தும்
உறமிசை யிருந்தஅளை களவினில் வாரியன்
றொருதிவலை சிந்தாதுணும்
உயர்புகழ்ப் பேரைவரு குலநாதன் முதுகவிதை
உலகெங்க ணுந்தழையவே.”

18. முடிக்குநம் பசுந்துழாய் சக்கரா யுதக்கடவுள்
முளரியுங் கண்ணனுக்கு
முதுமறை தெரிந்துதிரு வந்தாதி யாசிரிய
முறைவழா வடிதொழுது சொல்
வடிக்குஞ் செழுந்தமிழ்ப் பாடல யிரமுமகிழ்
மாறனுரை செய்தருளவே
வரிசையொடு பட்டோலை யெழுதுமென் மதுரகவி
வரமுனிவ னைப்பரவுதும்

குடிக்குக் தடந்திரைப் புனல்யாவு மொருமுகங்
கொண்டுபொரு நைபடியவே
கூடுபொரு நைத்துறைக் குலநாத னுயர்மாட
கூடங்க டோறும் நெடுவான்
இடிக்கும் கருங்கொண்டல் கண்படுக் கும்பேரை
எம்பிரான் வானப்பிரான்
இருசரண மலர்சூடும் எனதுகன கவிதையுல்
கெங்கணுந் தழையவென்றே”

இராமானுசர்

19. முதியகவி நாவலவர் தம்பிரான் திருஞான
முத்திரைக் கடவுள் திருவாய்
மொழிதனக் குரைவிரித் தெழுதும்பிர வுடவாக்கி
முழுதுமன் பர்க்கு வாழ்வு
புதுநறவு கக்கித் துளிக்குஞ் சரோருகப்
பொற்கழற் கருணாகரன்
புகலரிய பரசமய திமிராரி வண்புகழ்
பூதூ ரனைப் பரவுதுஞ்

சதுமறையு மறிவரிய குலநாதன் முத்தொடலை
தத்தும் தடம் பொருநையான்
தருமநெறி தவறாத திருவழுதி வளநாடு
தழையவரு கருணைமேகம்
விதிமுறையி னொடுதொழுது வருணன்
ஆராதனைசெய்
விமலன்மக ரக்குழையமால்
விரவுஞ் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிக்குள்ள
மிக்க சொற் றழையவென்றே."

செங்கீரைப் பருவம்

20. வானாடரும் பொற் பொகுட்டா சனப்பத்ம
மண்டபத் தினிதிருக்கும்
மறைக்கிழவ னுஞ்சடை முடிக்கடவு ளுங்குலிச
வச்சிரா யுதத்தலைவனும்
பூநாறும் வெட்சியம் தெரியல்புனை குமரனும்
புகர்முகத் தவனுமதியும்
பொங்குசுட ரிரவியுந் துங்கமுனி வரும்நெடும்
பொற்கோவில் வலம் வந்துநம்

கோனாகும் வருணனா ராதனைசெய் மஞ்சனக்
கொலுவில்வந் தடிவணங்கிக்
கும்பிட்டு நின்றுசே விப்பநற் சேவைபுரி
கோசலைக் கிருகண்மணியே
தேனாறு பச்சைப் பசுந்துழாய் மேகமே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே

21. முருகொழுகு பங்கயத் தடமுநீள் குளனுமலை
மோதும் புனற்சுழியினும்
முதிராத விளமணலும் நடைவரம் புஞ்செய்ய
முதுகுரம் புங்கரும்பும்
அருகுநெட் டிலைமுடத் தாழைநீ ழலும்வேலி
அடரும் செழுஞ்சோலையும்
அம்பொற் பசும்பாளை தளையவிழ்க் குங்கமுகின்
அணிவளமும் மதகினூடுஞ்

சொருகுகுழல மகளிர்குட முலையசைய நுணுகிடை
சுமக்கின்ற பொற்குடத்தும்
சுடர்மணிப் பொற்றடந் தேரோடும் விதியும்
சுரிமுகச் சங்கமுருந்
திருவழுதி நாடாள பரமபத வீடாள
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே.

22. அறுகால் வரிச்சுரும் படைகிடக் குங்குழல்
அரக்கிமண் டோதரிகழுத்
தழகுதா லிச்சரடு தரையில்வீ ழப்பருந்
தாயவெங் கழுகுமொய்ப்ப
மறுகால் நெடுஞ்சிகர மாடமா ளிகையிடிய
வலதுகண் கடைதுடிப்ப
வாசல்தொறு நெய்தலம் பறைகொட்ட
லெங்கையழல்
மண்டிவான் முகடுதாவக்

குறுகாத வல்லசுரர் செவியடைப் பக்கொழுங்
குருதிவாய் கொப்புளிப்பக்
கொடியரா வணன்மகுட முடிசிதற வரிசிலை
குழைத்துவெஞ் சமர்முகத்துச்
சிறுநா ணொலிக்கொண்டு விளையாடு மேகமே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே.”

23. இருகுழையு மணிகுதம் பையுமாட வெயில்விரிந்
திலகுகுறு முறுவலாட
இணைதிருக் கையினணி வளையாட மென்சுரும்
பிசைபசுந் துளபமாடப்
பொருவுமிரு சிலை நுதலின் வேர்வா டவேபொங்கு
புழுதிதிரு மேனியாடப்
புழுகொழுகு கரியகுழல் சரியவரை வடமும்நூ
புரமுந் தயங்கியாட

முருகுவிரி தருநறுங் கமலமதி முகவட்ட
முழுநிலா வீசியாட
முதியவா னவர்முனிவர் அமரர்கோன் வரல்வளா
முறையொடுங் காணவந்தார்
சிறுநா ணொலிக்கொண்டு விளையாடு மேகமே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே."

24\. சந்தன கதம்பப் படீரகுங் குமமுலைத்
தையல்மர கதவல்லிசெஞ்
சடிலேசர் வாமத் திருப்பநான் மறைபரவு
சதுமுகப் பிரமன்நாவில்
இந்துநுதல் வாணிசந் ததமிருப் பப்பணிந்த
திருசரண் மலர்சூடுவோர்
இதயதா மரைமலரும் நூற்றெண்மர்மசிந்தையினும்
இசைபாடி வண்டுகிண்டக்

கொந்தவிழ் நறுங்கமல மலரா சனக்கோயில்
குடியிருக் கும்பரிமளக்
கோமளக் கொடிவள்ள மாமதுரை யாச்சியர்
குழைக்காதன் நாயகியெனுஞ்
சிந்துரப் பொடியொடும் விளையாடு மழகளிறு
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே."

25. ஒள்ளொளி விரித்தசிறு கிண்கிணியின் நூபூரம்
உபையசர ணத்தினாட
ஒளிர்மணிப் பட்டாடை யாடவரை வடமாட
உச்சியின் மிலைச்சு பருதி
நள்ளிடை வயங்குபொற் சூழியத் தொகையாட
நகுநிலா முறுவலாட
நவமணிச் சுட்டியொரு கட்டுப்பொற் பட்டமுங்
நன்னுதற் பொட்டுமாடத்

துள்ளியெறி திரைமகர சலராசி படுசெழுஞ்
துய்யசெம் பவளமேனி
தொய்யக் குழைந்தாடு பண்டியுந் தொந்தியுந்
துணைநெடுங் குழையுமாடத்
தெள்ளமுத மணிவாயின் உள்ளொழுகி வழியவே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்ரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே

26. நிரையும் பசும்பொனணி மாடகூ பமுநெற்றி
நிழன்மணிச் சாளரத்து
நெடுநிலா முற்றத்து வாவிதொறு நீராடி
நிறைநறுந் தாதுபூசி
வருமந்த மாருதத் திளையமென் காலசைய
மாவிளங் குயில்கள்கூவ
மயிலாட வளிபாட வேனில்வேள் அரசுபுரி
வழுதிவள நாடுதழைய

விரையுந் தடம்புனற் பெருக்கா றெடுத்தோட
வெழின்மயிற் றழைபீலியும்
இணையிலா மணியுமா ரமும்யானை வெண்கோடும்
ஏற்றிஎற்றிச் சுருட்டித்
திரைவந்து கரைமோது பொருநையந் தண்டுறைவ
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே."

27. எத்திக்கும் வண்புகழ் தழைத்ததிரு வாய்ப்பாடி
இடையர்தம் குடில்கள்தோறும்
இடுகயிற் றுறியடுக் கியமணிக் கலசத்
திருக்குந் தயிர்க்கட்டிகண்
டொத்திக்கை யிட்டுரல் மிதித்தேறி யடிகுந்தி
ஒருதிவலை சிந்தாமலே
ஒண்பவள வாய்மடுத் துண்டிடுங் கள்வனென்
றுரலொடு கட்டியவர்கை.

மத்திட் டடிப்பவிரு கண்பிசைந் தழுதரையின்
மணிபொத்தி யாடிமறுகால்
வாயூறி யச்சுவை கனிந்தாய்ச்சி யாடைபட
வற்றக் கறந்து காய்ச்சுந்
தித்தித்த பாலக்கு மிச்சித்து நின்றவா
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே.”

28\. தாதவிழ் பசுந்துளவ மாலையா டச்சிறிய
தம்னியச் சுட்டியாடத்
தருணமர கதவயிர வலையமா டப்பொற்
றடந்திருத் தோள்களாடக்
காதுமணி தருமகர குண்டலமு மாடக
கவின்பொலியு மேனியாடக்
கதிர்முத்த வடமாட மதுரித்த செந்தமிழ்
கற்றவர்கள் கொண்டாடவே.

வாதுபுரி கொடிய சேனாபதி யிராவணன
மனவலிகள் திண்டாடநீள்
வானத் ததிர்ந்துதுந் தமியாட மலர்மாரி
வானவர் பொழிந்தாடவோர்
சீதர முகுந்த பேராயிர முகந்தவா
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேதை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே."

29. அலைவளைக் குங்கருள் கடலும்வான்

முகடுதொடும்

அம்பொற் கொடிக்குழா மொய்த்

தாதவன் பொற்றடந் தேர்தடுக் குஞ்செம்பொ

ணணிமாட கூடங்களும்

நிலைவளைக் கும்புக ழிலங்கா புரத் திறைவ

நெடியரா வணன் மகுடமும்

நீலிதா டகைமார்பு மாரீச னொடுகரனும்

நெட்டூர வதிகாயனுங்

கொலைவளைக் குங்கும்ப கன்னனும் நிகும்பனும்

குறுகாத வல்லசுரரும்

கொடியவா லியுமரா மரமேழு முருவக்

குழைத்துவடி வாளிதொடவெஞ்

சிலைவளைக் குந்திருக் கைத்தா மரைக்கொண்டல்

செங்கீரை யாடியருளே

செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள

செங்கீரை யாடியருளே."

தாலப் பருவம்

30. கயங்கொண் டலம்பித் திரையெறியுங்
கடல்சூழு முலக முழுவதும் வெண்
கவிதை நிழற்கீ ழினிதடக்கிக்
கருணை புரிய நாடொறுநின்
றியங்குஞ் சரங்க ளனைத்தையுமற்
றெல்லா வுயிருந் தன்னுயிர்போல்
இரங்கிக் காக்கு மரசர்பிரான்
என்ற சரத பெருமானு

முயங்கும் பிராட்டி மூவர்க்குள்
முதன்மைத் தலைவியாம் சிமிழ்ப்போல்
முற்றா முலைக்கோ சலைவயிற்றின்
முளைத்து மடிமேற் கிடந்துதனி
வயங்குங் கிரண மரகதமா
மணியே தாலோ தாலேலோ
மகரக் குழையே யென்னிருகண்
மணியே தாலோ தாலேலோ”

31. பண்ணார் மதுரம் பழத்தொழுகிப்
பாகூற் றிருந்து கனிந்தமொழிப்
பவளத் திருவாய் மணிமுறுவல்
பங்கே ருகக்குங் குமச்சுவட்டுப்

பெண்ணா ரமுதத் திருமடந்தை
பிரியா மருமத் தினிதிருக்கும்
பெயரா யிரம்பெற் றுடையதிருப்
டேரைப் பிரானே முறுக்கவிழுந்

தண்ணார் துளவப் புயசயில
தாமோ தரசீ தரமுகுந்த
தமரக் கடலில் புனல்முகந்து
தழைக்குங் கமஞ்சூற் கார்மே;

வண்ணா வுலகன் றளந்தநெடு
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலோலோ."

32. முளைக்குந் தவளக் கற்றைநிலா
முழுவெண் டிங்கட் டிருவதன
முற்றா முலைக்கோட் டரமகளிர்
முதுபெய ராயதவர் மருங்கிற்

றிளைக்குங் கொடிபோற் கொடி நுடங்க
வெழிமா மணிச்சூ கைமுகட்டின்
இணைக்கும் பசிய மரகதங்கான்
றெறிக்கும் கிரணக் கொழுந்தோடிக்

கிளைக்குந் துணர்க்கற் பகச்சோலைக்
கிடையே தழைபே வாகாச
கங்கைக் கரையிற் பசும்புல்லெனக்
கிட்டிச் சுரபி மணிநாவால்

வளைக்கும் பசும்புற் றலங்கள்மலி
வளஞ்சேர் நாடா தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ."

33. இடிக்குங் கடுங்சொற் கொடும்பாவி
இழைக்குந் தறுகட் கஞ்சன்விடுத்
திடுகோக் களிற்றின் புகர்முகத்தின்
ஏந்தும் பிறைக்கும் புரிமருப்பை

ஒடிக்கும் தடக்கைச் செழும்புயலே
யுணர்வுக் குணர்வே யென்னுயிரே
ஒழியாப் பிறவிக் கடல்சுவற்றி
யுயர்வீ டளிக்கும் பெருமானே

முடிக்கும் பசுந்தண் துழாய்மாலை
முடிக்கும் குழக வானவர்க்கும்
முதுநான் மறைக்கு மெட்டாத
மூலப் பொருளே பாகுபெற

வடிக்குந் தமிழ்த்தென் திருப்பேரை
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ.

34. கருது சமய மோராறுங்
கணிக்கும் பொருளே யுவட்டெறியுங்
கருணைக் கடலே செழுங்கமலக்
கண்ணா கண்ணின் உள்மணியே

திருகு சினவா ளவுணர்படச்
சிலைக்கால் வளைத்துப் போர்முகத்துச்
செல்லும் புயலே யுறியில் வெண்ணெய்
திருடும் குழகா பேய்முலைப்பால்

பருகும் பவளக் கனிவாயா
பசுந்தார்த் துளவ மணிமுகுந்தா
பங்கே ருகச்செஞ் சரணநெடும்
படப்பாந் தளின்மேல் நடித்துநெட்டை

மருதந் தவழ்ந்து சகடுதைந்த
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ."

35. சொல்லற் கரிய கிரணநெடுஞ்
சுடரா ழியினாற் கதிர்மறைத்த
கருதிப் பொருளே குருகூரன்
சொற்பா வமிர்தங் கனிந்தசெவிச்

செல்வக் குழகா பாட்டயர்ந்து
சிறைவன் டலம்பிக் கண்படுக்குஞ்
செழுந்தார்த் துளவ மணங்கமழுந்
சிகரப் புயபூ தரமுகுந்த

வல்லிக் கமலப் பொகுட்டுமட
வனஞ்சேர் வழுதித் திருநாடா
வடிவைத் தொருமூ வுலகமுமன்
றளக்கும் புயலே சேறுடைக்கும்

மள்ளல் பழனத் திருப்பேரை
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ."

36. இடையிற் றொடியக் கனத்தடிகொண்

டிளகித ததும்பிப் பணைத்திறுமாந்

தேந்துங் களபப் புள்கமுலை

யிலவத் துவர்வா யம்புயப்பொன்

பெடையைத் தழுவி யனுதினமும்

பிரியா திருக்குந் திருமார்பா

பெருவா ருதிசூழ் நிலவலையப்

பெண்ணுக் கிணங்கும் புயசயிலா

படையிற் சுமந்த கொழுநுழைந்த

பழனக் கொழுஞ்சேற் றினில்வரம்பிற்

பாகு படுநெட் டிலைக்கரும்பிற்

பசும்பூங் காவில் மணலினில்வாய்

மடையற் பணியந் தவழ்பேரை

மாலே தாலோ தாலேலோ

மகரக் குழையே நூற்றெண்மர்

வாழ்வே தாலோ தாலேலோ."

37. அடியாற் பிறவிக் கடல்சுவற்றி
அழியாப் பரம பதங்கொடுக்கும்
ஆழிப் புயலே பணாமகுடத்
தடல்வா ளரவின் கண்பிதுங்க

நடியா நிற்கும் ஒருகுழக
நாரா யணசீ தரமுகுந்த
நண்ணும் புலவன் கணிகண்ணன்
பின்பாய்ச் சுருட்டிச் சொற்றமிழ்க்குப்

படிமேல் நடக்கும் இருசரண
பங்கே ருகவன் றனல்கொழுந்தப்
பரவைக் கொருகாய் கணைதொடுத்துப்
பாரப் புயபூ தரத்திலங்கும்

வடியார் திகிரிப் படைசுமந்த .
மாலே தாலோ தாலேலோ.
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ.

38. கருணை பெருகி யுவட்டெறியுங்
கற்றா நிரையின் பின்னடந்து
கானந் தழைப்பத் துணைக்கமலக்
கழற்கால் பின்னிக் கன்றோடுகுன்

றுருகும் படிவேய்ங் குழல்வாய்வைத்
தூதும்புயலே சுவடியவர்தம்
ஒழியாப் பிறவித் துயரகற்றி
உள்ளத் திருக்குந் திருக்கறுத்து

நிருதர் குலமும் வேரறுத்த
நிமலா சமரா ரிடுந்திகிரி
நீலக் குழகா மணநாற
நிறைக்கும் பசுந்தண் டுழாய்முகுந்த

வருணன் பரவும் இருசரண
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ."

39. விடவா ளரவக் கயறுசுற்றி
வெற்பிற் பிணித்து விசித்திறுக்கி
விரிதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்
விண்ணோ ரமுதங் கடைந்தவந்நாள்

அடருங் கிரணக் கவுத்துவமும்
அருளுந் திருவுந் தடமார்புக்
சுமைத்துத் திருப்பாக லாழியினும்
அரங்கத் தினுங்கண் டுயில்பெரும

குடவால் வளைகு லுளைந்து செந்தேன்
கொழிக்கும் பொலன்றா மரைப்பொகுட்டிற்
குளிர்முத் துயிர்ப்பக் கருவென்னக்
கொணர்ந்தஞ் சிறைய விளம்பேட்டு

மடநாரை ரைகள்கண் டடைசெறிக்கும்
வளஞ்சேர் நாடா தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ "

சப்பாணிப் பருவம்

40. "அரமகளிர் தங்கழுத் தணியும்நாண் கழலாமல்
ஐந்தரு வடிக்கெடாமல்
அயிரா பதப்பெரும் பகடொளித் தோடிநீள்
அலைகடற் புக்கிடாமல்

திரளவடி கொண்டதெள் ளமுதமது
கொள்ளைபோய்த்
தேவர்கள் நடுக்குறாமல்
தெய்வேந்திர னுக்கரசு மகுடபங்கம் வந்து
சிறைச்சாலை யுட்படாமற்

கரதூடணன் திரிசிராநிகும் பன்கும்ப
கன்னன்இந் திரசெயித்துக்
கலங்காத ராவணன் மடியலங்காபுரங்
கனல் கொழுந் தப்பெருவிரல்

சரடுபூட் டிச்சிலைக் கடைக்குழைக் குங்கொண்டல்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசொறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே."

41. அமரர்கின் னரர்முனிவர் கிம்புருட ரும்பரவும்
அயிராபதப் பானும்
அம்பாத் திடையுலவு கங்கைப் பெரும்பரவை
அலையெறிய விட்டசடிலத்

துமையையொரு பங்குடைக் கடவுளுந் தொழுதுளம்
உவப்பவம ராடுசுடர்வேல்
ஊறுபடு நயனப் படீரகுங் குமமுலைக்
கொல்குமொரு நுண்மருங்குற்

குமுதவாய் மடமங்கை தேவகிக் குள்ளங்
குழைந்துகண் களிகூரவே
கோசகைக் கினியகைக் கோமளக் குழவியே
கோதிலா மழைவள்ளலே

தமரவரி வண்டடை கிடந்தமுள ரிக்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே."

42. வேதங்க ளோடைந்து பூதங்க ளுமயன்
விதிக்கின்ற பல்லுயிர்களும்
மிக்கவைம் பொறிகளு மெட்டெழுத் துநின்று
விளையாடு மொருகுழவியே

ஏதங்களைந்தடியர் இருவினை தணந்துபேர்
இன்பத் திருத்துமொளியே
இலகுசுடர் வேல்விழி துரோபதை தனைச்சிறிதும்
எண்ணாது துகிலுரிதரும்

போதந்த வேளைவந் துதவுசீ தரதுமாய்ப்
பூதரப் புயமுகுந்த
பொருவரிய வண்டகோ ளகைமுகடு கீறியப்
பொன்னுலகின் மேலிபாரி

சாதங்க கொணர்ந்தருள் பின்னைக் களித்தவன்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே

43\. அடங்காத வெழுபது வெள்ளஞ்சே னையுங்கை
அமைக்கும் படைத்தலைவரும்
அனுமன்முத லாயசுக் கிரீபனுஞ் சென்றுகடல்
அணைகட் டிலங்காபுரந்

தொடர்ந்தேறி யொருசிலைக் கடைகுழைத்
தடுகணை
துரந்திரா வணனை மகுடந்
துகள்படுத் திச்சனகி சிறைமீட்ட தண்ணந்
துழாய்க்காள மேகங்கொடு

விடந்தாவு பஃறலைக் கட்செவி கிடந்தாட
விரிதிரைக் கங்கையாட
வேணியா டக்காளி தன்னுடன் வாதாடும்
வெள்ளிப் பொருப்பனன்பாற்

தடந்தாரு வேரோடு புறந்தாள் கொணர்ந்தமால்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே."

44. மண்டுதிரை யெறிமகா சலராசி யெழுநெடு
வரையேழு மகிலமேழும்
வானகமு முயர்திசையு வயிறடங் கப்பவள
வாய்மடுத் துங்கரந்துமுன்

உண்டுமிழ நீல்நிறக் குழவிநெடு வாலிமார்
புருவவொரு சரம்விடுக்கும்
ஒண்டிறற் செங்கைத் தடங்குரிசில் வேதாந்த
உபநிடத ஞானதீபம்

புண்டரிக மலர்முகை முறுக்குடையு மோடையிற்
புககிடங்க ர்க்குவெருவிப்
போரானை முலமென் றோதாமுன் ஓடியொரு
புளரசு மீதுவருபைந்

தண்டுழாய் புனைகொண்டல் அண்டர்நா யகளினிது
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே.”

45. வண்ணந் தழைந்தகட லுலகமுழு தும்பரதன்
மணிமுடி கவிப்பநீவெவ்
வனமே கெனுஞ்சிறிய தாய்சொற் றலைக்கொண்டு
மணிநெடுஞ் சீரைசுற்றிப்

பெண்ணென்ற சீதையொடு மிளையவன்
றன்னொரும்
பெருங்கா னகம்புகுந்த
பெம்மான் நறுந்துளவ மாலிகா பரணன்முது
பேரின்ப வீடளிக்குங்

கண்ணன் சிலைக்கடை குழைத்திலங் காபுரங்
கட்டழிக் குந்தேவர்கோன்
கருணைப் பெருக்காறு உவட்டெடுத் தலைமண்டு
காளமே கந்துளிபடுந்

தண்ணந் தடந்திரைப் பொருநையத்
துறைவனொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே."

46. "உடுக்குந் திரைக்கருங் கடலாடை நிலவலையம்
உதரத்தி னுள்ளடக்கும்
ஒருசிறிய குறளுரு வமைந்தநெடு நேமிமால்
உபையசர ணாரவிந்தத்

தெடுக்கும் பனிக்குறுந் திவலைபடு மலரிட்
டிறைஞ்சிவரு ணன்பரவுவோன்
இசைபாடி யொருகோடி யறுகால் துதைந்தாடும்
ஈர்ந்துழாய்ப் படலைமாயன்

மடுக்குங் கொழுங்சுடர்ப் பருதிவா ணவனுதைய
வரைபசும் புரவிமுட்டி
வருமணிப் பொற்றடந் தேரினுக் கிடுஞ்சித்திர
வட்டாழி யெட்டிமுட்டித்

தடுக்கும் பொலன்புரிசை சூழ்வழுதி நாடனொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொடடியருளே."

47. மானவே லரசர் தொழுமிதிலா புரிச்சனகன்
மாதேவி மணிமுன்கைமேல்
வைத்துமுத் தாடும் பசுங்கிளி யெனத்தூய
மஞ்சனஞ் செய்து செம்பொன்

மேனிமுழு வதுநலுங் கிடுசெய்து கொங்கைக்கு
மென்களப மள்ளியப்பி
விரைநறுந் தார்குழலின் மீதணிந் தஞ்சனம்
விளங்குகட் கடையினெழுதிக்

கூனிளம் பிறைநுதற் கத்தூரி தீட்டிநற்
குளிர்மணிச் சுடிகை நாற்றிக்
கோல்வளை திருத்திமணி மேகலை மருங்கினிற்
கொய்து கொய்தினி துடுக்குஞ்

சானகி பெருங்காம வெள்ளத் திளைத்தவன்
சாப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே

48. கக்கக் கொழுங்குருதி நரிபிடுங் கத்தசை
கவர்ந்துயிர் குடிப்ப மறலி
கருநிறத் தாடகையை வதைபடுத் தச்சிலைக்
கடைகுழைத் தடுகணை தொடுந்

தொக்கிற் பெருந்தவக் கவுசிகன் வேள்வியுஞ்
சுருதி நூல் முறைமுடித்துச்
சொல்லரிய மிதுலா புரிச்சனகன் விற்கண்ட
துண்டப் படுத்து மெங்கோன்

செக்கச் சிவக்குங் கொழும்பவள வார்கதிர்ச்
செஞ்சடா டவிமணிமுடிச்
சிவசங்க ரக்கடவுள் கண்கள்களி கூரச்
சிறந்தருள் புரிந்து சங்கு

சக்கரத் துணைச்செங்கை யொக்கச் சிவப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே.

49. படநடுங் கக்கண் பிதுங்கப் பணாமுடிப்
பஃறலைக் கட்செவியின்மேற்
பவுரிமுறு கித்திருகி நடனஞ் செயுங்சரண
பங்கேருகக் குழகன்வெவ்

விடரகற் றிச்சென்ன வலையறுத் துத்தொண்டர்
ஈடேறி வீடுகுடிபுக்
கெக்கால முமர சிருப்பக் கடைக்கணோக்
கின்னருள் புரிந்த நெடுமால்

மடமயிற் சாயற் பசுங்கிள்ளை யங்குதலை
மணிவல்லி தூயவல்லி
வளருந் திருப்பேரை வல்லிகுங் குமமிறுக
மதச்சந்த ணப்பாளிதத்

தடமுலைலச் சுவடுபொரு துழுதமணி மார்பனொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே.

முத்தப்பருவம்

50. சொற்றநான் மறைபுக் கிருக்குமிட மாதலால்
சுரிசங் கிடம் புரிவதால்
துய்ய மலர் மாளிகைச் செல்விபே ரமுதந்
துளிக்கு மென் றின்புறுதலான்

மற்றுமெகின் வாழ்பல் லுயிர்க்கிரங் குஞ்சத்திய
வாய்மைகுடி கொண்டுறை தலால்
மங்கலப் புனிதமாஞ் சகலமுந் திருவுள
மகிழ்ந்திரங் கிச்சிறிது நீ

முற்றுறா மதியொடே அறுகெருக் கும்நறா
மொய்க்குஞ் செழுங்கொன்றையும்
மூரித் திரைப்பாய்சுருட்டித் தருங்கங்கை
முதுநீரும் விரவுசோதிக்

கற்றைவார் சடைமுடிச் சிவனுமய னுந்தொழக்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின முத்தமருளே."

51. "தழைமடற் பச்சைப் பசும்பூக மணிமிடறு
தளையவிழ்க் கும்பாளைவாய்க்
தருமுத்த மும்பச் செனக்கிரண மட்குமுது
தாற்றிளங் கதலிவாழை

யுழைமுத்து முடலிழுக் குண்டுரியு மென்கரும்
பொளிர்முத்து மாலைவாயிட்
டுடனெருக் கும்பொழுது கணுவினில்
வெடித்துதிரும்
உம்பர்வான் முகடுதூங்க

மழைமுத்த முந்துளி படும்போது செவ்வுக்கு
வாராது வடிவுதகரும்
வளர்புண்ட ரீகப் பொகுட்டுமுத் தஞ்சிறைய
வண்டுகால் கொடுதுவைக்கும்

கழைமுத்த முங்கதிர் வெதுப்புண்டு நீறுமொரு
கதிர்முத்து நிகரல்லவே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின் முத்தமருளே."

52. முனியுமிள வலுமுடன் வரத்தன் திருத்தாளின்
முளரித் துகட்கருகங்கல்
முனியிட்ட சாபந் தவிர்த்துமுன் னுருவெய்த
முதுகருணை யோடளித்துச்

சனகன்மிதி லாபுரிச் சிலைவளைத் துச்சீதை
தனைமணம் புணர்தண்டுழாய்
சக்கரா யுதக்கடவுள் குலநாதன் முத்தோடலை
தத்தும் தடம் பொருநையான்

இனியசது மாமறைக் கொருமுதல்வன் வருணன்வந்
தெக்காலமும் பரவுகார்
இலக்ஷகொடி மணிமாட வழுதிவள நாடனூற்
றெண்மரொடும் விளையாடுமால்

கனியுமமு தும்பாகு மூறிக் கலந்தசொற்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின் மூத்தமருளே."

53. பொருதிரை சுருட்டுமணி மகரசல ராசிதரு
புதுமுத்த முங்கைதொடேம்
புலவுநா றிச்சுற வெறிந்துடல முவரிப்
புனற்பங்க மூடெழுதலால்

பருகமது ரித்தபா கூற்றிருந் தொழுகும்
பசுங்கரும் பீன்ற முத்தும்
பமொழிக் கபடுபடு மாதலா லதனையும்
படுபழி யறிந்து வேண்டேன்

இருநிலத் துச்சிவத் துக்கண்ட முங்கறுப்
பென்றுவேய் முத்துத்தொடேம்
இனிமேலும் நினதுகனி வாய்முத்தி னுக்குவமை
எடுத்தெடுத் துக்கூறுவேன்

கருதுமுது நான்மறைக் கொருமுதல்வ னேசெழுங்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின் முத்தமருளே."

54. உலைவளைக் குங்கொழுங் கனல்வாய்
துருத்திவைத்
தூதவெம் பொறிசிந்தவெந்
துருகுங் கருங்க லுருக்கோ டிரும்புவைத்
தொன்றா யடித்து நீட்டித்

தலைமடுத் ததைமுனை படுத்திக் குணக்கறத்
தட்டியர மிட்டராவிச்
சமைந்தொப்ப மிட்டுக்கடைந்தவடி வேல்பொரு
தடங்கட் செழுங்குமுதவாய்

மலைவளைக் குஞ்செழுங் களபகுங் குமமுலை
மடந்தைதெய்வ வீகமோக
மடமயிற் சீதைப் பிராட்டியை மணம்புணர்
வளமருவு மிதிலாபுரிச்

சிலைவளைக் கும்பசுந் தண்டுழாய் மேகமே
திருவாயின் முத்தமருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதநின்
திருவாயின் முத்தமருளே.

55. பம்புதிரை வாருதி வடிம்பலம் பத்துளி
படுங்கன முகடுகோத்துப்
பரக்கும் படிக்குமுன் பெய்தகல் மாரியிற்
பதறியா நிரைகெடாமல்

தம்பற் றிடையர்மடி யாதேழு நாளுமுது
தடவரை யெடுத்தேந்துமென்
தாமரைச் செங்கைத் தடங்குரிசி லேசங்கு
சக்கரா யுதக்கடவுளே

கம்பமத மால்யானை மூலமென் றோதவோ
கருடன் பிடர்த்தலைவரும்
காராழி மணிவண்ண பேராயி ரம்பெற்ற
கருணா கரக்குரிசிலே

செம்பவளே முங்குமுத முங்கவிரு மொத்தநின்
திருவாயின் முத்தமருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதநின்
திருவாயின் முத்தமருளே."

56. "பொங்குவெண் திங்களங் கவிகைவரு மிரணியன்
புகலவவன் மதலையப்பேர்
புகலரமல் எந்தைநா ராயண னெனப்பெயர்
புகன்றதிலே முந்துகோபித்

தங்கைமலர் மீதுசங் காழியேந் தியப்பிரமன்
அவிர்சடைப் பெருமானுளம்
அஞ்சிப் பதுங்கித் திரிந்தனர் மறந்தனைக்கொல்
அரியெங் கெனப் புடைத்துப்

பங்கமுறு மக்கனகன் மார்பம் பிளந்திழி
பசுங்குடர் பிடுங்கிரத்த
பானம்பண் ணித்ததடந் தோள்மாலை சூடவே
பண்டுகளி கொண்டோர் தூணிற்

சிங்கவடி வாய்வந்த வெங்கள்குல நாதனே
திருவாயின் முத்தமருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதநின்
திருவாயின் முத்தமருளே."

57. மூவா முதலா வுலகமொரு
மூன்றும் பரவ வங்குரித்து
முத்திக் கொருவித் தாகவந்த
முதுநான் மறையின் குலக் கொழுந்தே

கோவா தொளிரும் மரகதமே
கொடும்போ ரரக்கர் குலக்கூற் றே
கோவேத் தியரு ளக்கமலம்
குடிபுக் கிருக்கும பெருமாளே

தாவா வளமைக் கோசலைக்கோர்
தவமே தவத்தின் பயனேயச்
சனகன் றருசா னகிவேட்ட
தடக்கைக் களிறே போரேறே

தேவா வமிர்தங் கனிபவளத்
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலுந் தமிழ்ப் பேரைச்
செல்வா முத்தந் தருகவே."

58. துளிக்குந் திருப்பாற் கடன் முகட்டுத்
தூய தரங்கத் தனந்தபுரத்
தொருவா விருகண் துயில்கூருஞ்
சோதிச் சுடரே பேரின்ப

மளிக்குங் கருணைக் கருங்கடலே
அழியா வீட்டுக் கொருவிளக்கே
அமுங் கடைந்து திரட்டி யெடுத்
தமராக் குதவும் பெருமானே

களிக்குஞ் சுரும்பர் துதைந்துழத்தேன்
கக்குங் கமல முறுக்குடையுங்
கழனித் தடஞ்சூழ் திருநாடா
கண்ணா வரிகே சவமுகுந்தா

தெளிக்கும் பொருநைத் தடந்துறைவா
திருவாய் முத்தந்தருகவே
தெள்ளிப் பயலுந் திருப்பேரைச்
செல்வா முத்தந் தருகவே."

வாரானைப் பருவம்

60. விதுரன் மனையில் அடிசில் நுகரும்
விரகன் வருக வருகவே
விதர ணிகமும் அறிவு முடைய
விமலன் வருக வருகவே

அதிரு மணியும் அரையின் வடமும்
அசைய வருக வருகவே
அழகு கரிய குழல்கள் சரிய
அபிமன் வருக வருகவே

புதிய மதியின் வதன வெயர்பு
பொலிய வருக வருகவே
பொழியு நறவு விரவு துளவு
புனையு மனகன் வருகவே

மதுர முறுசெவ் வதர வமுதம்
உதரம் வழிய வருகவே
வருணன் வருடு முபைய சரண
வரதன் வருக வருகவே

61. எரியு மனல் கதுவும்விழி நிருதரொடு சமர்புரியும்
இகல் தொலைய விடுகணையினான்
இருவினையு மொருசிறிது தொடரவரி தெனவரும்
எவர்தமையு மடிமைகொளுமால்.

முரிபுருவ நுதல்வனிதை சனகிமுலை முகடுழுத
முகலளித விதரணமுளோன்
முருகுவிரி தருதுளவு மணமலிய நெடியமணி
முடியினணி பெறவனைகுவோன்

உரியசது மறையுமுனி வரருமய னொடுபரவும்
உபைய பரி புரசரணநீ
டுலகமுழு வதுமுதர மமைய வொரு தனி நுகரும்
ஒளிரும்ரவி குலமரபினோன்

நெறியம ந தமுமுதிய சகடுமுதை விதரணிகன்
நிமலன்அர வணைதுயி லுமால்
நெறியுமகி மையுமளவில்குணனும்வடி வழகுமுடை
நிகரில்முகில் வணன் வருகவே.”

62. புகல ருஞ்சது மறைய ருந்தவர்
புலவர் பண்டிதர் மலர்கொடே
புதிய பங்கய சரண்வ ணங்கிய
புனித வெண்டிரை யுததிசூழ்

செகம டங்கலு நொடியி னுண்டுமிழ்
திரும ணந்தொளிர் மருமவோர்
திரிபு ரந்தழல் படமு னிந்தருள்
சிவன யன்றொழ வருகவே

தகர முங்கிய பரிம ளங்கமழ்
தருத டம்புய சயதரா
சமர்மு கந்தனில் நிருதர் வெம்படை
சரியி டுஞ்சிலை யபிமநீள்

மகர குண்டல மசைய வம்பொனின்
மணிவ டஞ்சுடர் விரியவே
மணம லிந்தலர் துளவ ணிந்தருள்
மகர வண்குழை வருகவே.

63. கலைம ணந்தொளிர் தவளவெண்பிறை
கதுவி டுஞ்சிலை நுதலினாள்
கவின்ந லந்தரு சனகி சம்பிரம
கனத னம்பொரு துழுதமால்

உலைமு கந்தனி லடிபடும் பொழு
தொளிருமொண்சுடர் வயிரவா
ளொடுமு னிந்தட ரவுணர் டொன்றிட
உயிர்அ டுஞ்சமன் வருகவே.

திலக மஞ்சரி துளவசைந் தொளி
திகழு வண்டின முரலவே
செழுந றுந்துகள் முகைவிரிந்தலர்
சிறயி பங்கய மெனுநறா

மலர்ம டந்தையு நிலமடந்தையு
மருவு திண்டிறல் வரதநீள்
மகர குண்டல மசைய விங்கெதிர்
மகர வண்குழை வருகவே

64. உளநெ கிழ்ந்திரு பொழுதும் வந்தனை
யொடுமு வந்தெதிர் பரவவே
உபைய செஞ்சரண் முடிபுனைந்தொளிர்
உயர்ப தந்தரு கருணைமால்

அளைக வர்ந்திடை மகளிர்தங்குடில்
அணைத ருங்கயி றதுகொடே
அடிபடும்பொழு துடல்கு ழைந்தழு
தழுது நின்றவன் வருகவே

குளநி ரம்பிய புனலினுங்கரை
குலுகும் வண்டலு மதகுநீள்
குவளை யம்படு கருநெருங்கிய
குளிர்ந றும்பொழில் இடையும்வால்

வளைமு ழங்கிய குருகையம்பதி
மருவு நங்கைகண் மணிநன்னா
வலவ னிங்கித கவிதை கொண்டருள்
மகர வண்குழை வருகவே."

66. பண்டா லிலையின் அரங்கத்துப்
பாலா ழியற்கண் டுயல்கூரும்
பச்சைப் புயலே பணாமகுடப்
படப்பாந் தளின்கண் பிதுங்கற்றுஞ்

தண்டா மரைச்செஞ் கரண் பெயர்த்துத்
துள்ளிக் கடைலால் பிடித்து நெறி
தழைக்கும் படிக்கு நடம்புரிந்த
தலைவா கடல்சூ ழுலகமுழு

துண்டா தரவோ டுமிழ்ந்தளந்த
ஒளியே யொளிரு மரகதமே
ஒருவா ணுதல்பண் டுளங்கவிப்ப
உயர்வான் முகடு கிழித்தெழுந்து

வண்டார் தருவின்மலர் முகாணர்ந்த
மாலே வருக வருகவே
மகரக் குழையே என்னிருகண்
மணியே வருக வருகவே

69. அருமைப் பெருமான் பிறவியொழித்
தருளும் பெருமான் கரதலச்சங்
கழிப் பெருமான் வானவர்க்கும்
அருநான் மறைக்கு மெட்டாத

தருமப் பெருமான் பசுந்துளவத்
தாமப் பெருமா னேழுலகும்
தழைக்கும் பழக்கன் றளந்த நெடுஞ்
சரணப் பெருமான் மன்னுயிர்க்குங்

கருமப் பெருமான் முத்திவழி
காட்டும் பெருமா னம்பொகுட்டுக்
கமலா சனத்து வீற்றிருக்குங்
கன்னிப் பெருமான் தமிழ்க்குருகும்

பெருமைப் பெருமா னென்னருமைப்
பிள்ளைப் பெருமான் வருகவே
பேரா யிரம்பெற் றுயர்ந்ததிருப்
பேரைப் பெருமான் வருகவே.

அம்புலிப் பருவம்

70. மதியுடைத் தாயமண் டலம்பெற்று வான்முழு
மதிக்கடவு ளெனவருதலால்
வடியிட்ட தெள்ளமுத மயமாகி யானந்த
மகராலயத் தெழுதலால்

நதியொடர வறுகெருக் கணியுஞ் சடைக்காட்டு
நம்பனுக் கொருகண்ணதாய்
நாடொறு முயிர்ப்பயிர் தழைப்ப வருள்மொழிவதால்
நற்றுணை யுனக்கிவன் காண்

முதிரிவிளை யுங்கொழும் பவளக் குலைச்சாலி
மூடுதொறும் வாய்மடை தொறும்
மூரிப் பகட்டுவரி வாளை வெடிதாவியலை
மோதும் புனற்கேணியும்

அதிருமணி மதகுமவளை யுகள்வழுதி நாடனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

தானம்

71\. *இருவினைச் சென்னவலை கட்டறுத் தழியாத*
இன்பவீ டெய்தும் பொருட்
டிணைமலர்ச் சேவடி யடைந்தவர்க் குதவிடுவன்
இவன்வருண னாதரிக்கும்

திருநதிச் சமுகதீர்த் தத்துறைத் தீம்புனல்
திவலையொரு சிறிதுபடிலோ
செகமண்ட லத்துன்முக மண்டல முயற்சறை
சிதைத்துவண் டடைகிடப்ப

முருகுவிரி தருநறுங் குமுதவாய் மடமங்கை
முகிண்முலை மணம்புணர்ந்து
முன்னும் களங்கமற் றப்பாலும் வைகுண்ட
முத்தியமண் டலமெய்தலாம்

அருமறைக் குரியவொரு பொருளா யிருப்பனிவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழியா தவனுடன்
அம்புலீ யாடவாவே."

72. வெவ்வோர் விடமொழுகு கறையணற் பகுவாய்
விழுங்கிமி ளவுமுமிழ்தரும்
மிச்சிலென் றுலகிலுரை செய்வர் அதனுலுடல்
வெளுத்தற மெலிந்துகுப்புரி

றெவ்வுலக முந்திரிந் தாவதென் பெரியோரை
எளியோர் துணைக்கோடல்நன்
றிருகறை கட்செவிப் பகைமுடித் தற்குவண
னிவனிட்ட வேவல்கடவான்

செவ்வுபடம வெட்டிரட் டித்தகலை யுடையநீ
சிந்திப்ப தற்கலிரியவாந்
திகழுருங் கலைகளறு பத்துநா லுடையவொறா
செம்மலிவன் வைகுண்டமாம்

அவ்வுலக முந்தரக கர்த்தனிவன் அஃதறிந்
தம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அமபுலீ யாடவாவே."

74. பொங்குகதி ராயிரந் தங்குசெஞ் சுடரவன்
பொழுதுகா ணாமலொளிர்செம்
பென்னிறத் திகிரியா லிவன் மறைத் தனனன்று
போதாக் குறைக்கொளிரும் வெண்

சங்குகொண்டு டுன்னையு மறைந்திடா மற்கலை
தளர்ந்து மெலி வெய்துறாமல்
தாதள வெருப்பொடி யெடுத்தெறியா மல்முன்றில்
தவழ்ந்துவிளை யாடவாவென்

றங்கைமலர் விரல்குனித் துணையழைத் தனனிலன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

பேதம்

75. " கூறருந் துதியை நீயுடையவ னிவனமார்
கூற்றாந் துதியையுடையான்
குறைபடு தடங்கலைக ளுடையநீ யிவனுமோ
குறையாத கலைகளுண்டையான்

வீறுதரு முருவிலி மதிக்குடையன் நீயிவன்
விதரண மதிக்குடை.யவன்
விண்ணிடைக் கரந்தொளி யொளித்திருவை நீயிவன்
வேதநுட் பொருளி னொளியான்.

ஊறுபட வோடித் திரிந்திளைத் திடுவைநீ
ஒருநாளு மிளையானிவன்
உவரிப் புனற்பங்க மூடுதித் திடுவையிவன்
உம்பரா ழியினுதிப்பான்

ஆறலை புரட்டுபொரு நாநதி நெடுந்துறைவன்
அம்புலி யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலி யாடவாவே."

தண்டம்

76. சந்தப் படாமுலைத் தார்குழற் கோமளத்

தையல்சா னகிபொருட்டுத்

தடமதி ளிலங்கா புரம்பொடி படுத்தித்

தகர்த்துமுடி பத்துமண்மேற்

சிந்தச் சரந்தொட்ட சிலைவீர ராகவன்

சிறுகுழந் தைப்பிள்ளையாய்த்

திருவிரல் தலைசுட்டி யுனையழைத் தால்வரச்

செய்யா திருக்கமுறையோ

முந்தப் பெருந்தக்கன வேள்வியற் றேவர்கள்

முறிந்து திசை கெட்டோடுநாள்

முழுமதிக் கடவுள்நீ பரிபவப் பட்டகதை

மொழியக் கணக்குமுண்டோ

அந்தக் கணக்கின்றும் வந்திருக் கின்றதினி

அம்புலி யாடவாவே

ஆழிநீர் வண்ணனெனும் வாழிமாதவனுடன்

அம்புலி யாடவாவே.”

தாணம்

77. தவநெறிக் கவுதமன் பன்னியக லிகைபுரந்
தரனொடு மணந் தவதனால்
தவமுனி அறைந்தசா பத்தில்வன் கல்லுருந்
தாங்கிய தொழித்த தெங்கோன்

புவனமொரு மூன்றுமி ரடியா லளக்கின்ற
பொறக்கழற் றுகளுனக்கும்
புனிதப ரணசெவ்வி முகமண்ட லக்கறைப்
பரைதீர வரமளிக்கும்.

சிவனுமய னும்வெள்ளை யயிரா பத்தனும
செஞ்சுடர்க் கடவுளோனும்
தேவர்முப் பத்துமுக் கோடியு மறுமுகச்
செம்மலுங் கைம்மலைக்கோட்

டவனுமுறை முறைபரவு நிகரில்முகில்
வண்ணனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர்வண்ண னெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே."

78. விண்டடவி முகமாயி ரங்களு மொளித்துநெடு
வெளியின்வந் தொருமுகமதாய்
வெண்டிரைக் கங்கைப் பெரும்புனல் பரந்தென
விரிந்தவவ் வெள்ளத்தின்மேல்

தண்டரள மணியுமிழ்த் தாகாய நள்ளிடை
தயங்கிய சலஞ்சல மெனத்
தாரகை க்குலமொடு தவழ்ந்துமேன் மேல்நீ
தலைப்பட்ட வாதலானும்

புண்டரிக மலர்முக முறுக்குடைந் தலருமொரு
பூவெனப் பொலிவுபெற்றாய்
புகலரிய மதிவள முரைக்கில்முழு மதியெனப்
புகல்கின்ற துண்மைகண்டாய்

அண்டபகி ரண்டமும் நீரம்பிய இவன்றனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே."

பேதம்

79\. என்னென்று நிகராவை யிருளன்றி நீயன்பர்
இதையருள் நீக்கவறிவாய்
இருவிசும் பிற்பொலிகு வாயிவன் புவனங்கள்
எங்கணும் பொலிவதோராய்

பொன்னந் தகட்டிதழ்க் குமுதமல லாலுளப்
புதுமலர் திறக்க வறியாய்
போலியல் லாவுனைப் போலியென் றால்வந்து
புதுநிலா மணிமுன்றில்வாய்

மன்னுஞ் சாரோருகப் படுகரும் புளினவெண்
மணற்குன்ற முஞ்சோலையும்
மடவனப் பெடையோடு கூடிப் புணர்ந்தக
மகிழ்ந்துபிரி யாதுசெஞ்சூட்

டன்னங்கள் விளையாடு தென்பேரை மாயனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவனாவே."

சிற்றில் பருவம்

80. களிக்குஞ் சுரும்பர் துதைந்துமுது
கணைக்கா லசைத்துச் சில்லோசை
கனிந்தூற் றிருப்ப மிழற்று தொறுங்
கக்கும் கலுழி நறவுபரி

மளிக்கும் பசுந்தார்ச் செழுந்துளப
மணக்கும் குழகா கார்மேக
வண்ணா கருணை மடைதிறந்து
வழியும் புயலே பேரின்பம்

அளிக்கும் பெரும் தெருவீதி
யருகே வழிக்குப் புறம்பாக
வறியாப் பருவப் பெண்களெடுத்
தமைக்கும் வண்ட லிதுகண்டாய்

தெளிக்குந் தமிழ்த்தென் திருபபேரைச்
செல்வா சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே."

81. வேண்டக் கிடையா வாரமுதம்
விரிதென் டிரைநீர்க் கடன்முகட்டின்
வெற்பைப் பிடுங்கி மத்தாக
விடவா ளரவக் கயிறுசுற்றிப்

பூண்டக் கணமே சுவைமதுரம்
பொங்கிப் பெருகக் கடைந்தெடுத்து
புலவர்க் களிக்கும் பெருமானே
பொருந்தா நிருதர் போரேறே

காண்டற் கரிய கொழுங்கிரணம்
கக்கும் பசிய மரகதமே
கதிரா ழியிற்செங் கதிர்மறைந்த
கருணைப் புயலே பூமகள்கை

தீண்டச் சிவக்கும் பொலன் தாளால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையள் பொருநைத் தடந்துரைவா
சிறியேம் சிற்றில் சிதைமேலே."

82\. வள்ளைக் குழைவேற் கருநெடுங்கண்
மதிவா ணுதற்கோ மளப்புளக
வனமா முலைக்குங் குமச்சுவட்டு
மடவா ரொடும்போய் விளையாட

அள்ளிக் குடிக்கும் தடம்பொருநை
யாற்றிற் கூடு புனற்றுறையின்
அருகிற் சிறுபேதை யர்களொடுத்
தடங்கா விருப்ப மீதூர்ந்து

தள்ளிப் பரலமாற் றரும்பசும்பொன்
தகட்டின் வயிறூ ரியங்குயிற்றிச்
சமைக்குந் திருமா மணிமுறத்துத்
தருந்தா மரைக்கைச் சேப்பமணல்

தெள்ளிக் கொணர்ந்து தரவிழைத்து
சிறியேம் சிற்றில் சிதையலே
தெளிக்கும் தமிழ்த்தென் திருப்பரை
செல்வா சிற்றில் சிதையலே
திரையுமற் பொருநைத் தடந்துறைவ
சிறியேம் சிற்றில் சிதையேலே."

83. தருக்கா மலர்ப்பூம் பொழிலும் வயல்
தடமும் தருதென் திருப்பேரை
தழைக்கும் படிநூற் றெண்மர் தொழுந்
தாமோ தாசீ தரமுகுந்த

வொருக்கா லெனுமவ் விருக்காலும்
உணராப் பொருளே பரஞ்சுடரே
ஒருவா னுதல்பண் டுளங்களிப்ப
உயர்வான் முகடு கிழித்தெழுந்து

மருக்கால் நறுமென்மலர் கொணர்ந்த
மதமோ பதினா றாயிரங்கோ
வலாமங் கையர்கள் புளகமுலை
மணந்து கனிவா யமுதமுண்ட

செருக்கோ வுனக்கீ தியல்பன்று
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே."

84. கோவே கோவா மரகதமே
கொடும்போ ரரக்கர் குலக்கூற்றே
குளிர்பூந் துளவத் திருத்தொங்கல்
குவவுத் தடந்தோட் காயாவாம்

பூவே பூவின் பொலன் பொருட்டுப்
புதுமென் மணமே வருள்சுரந்து
பொங்கிப் பெருகி யுவட்டெறிந்து
பொழியும் புயலே கற்பகப்பூம்

காவே முதுகோ சலைதவமே
கண்ணே கண்ணின் உள்மணியே
கதிர்நித் திலவெண் மணல்நினது
காலி னுறுத்தக் கடனன்றே

தேவே தேவப் பெருமானே
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா —
சிறியேம் சிற்றில் சிதையேலே."

85. வன்னக களபப் புளகமுலை
மடவா ரெனுங்கோ வியர்கள் திரு
வாய்ப்பா டியிற்புக் களைகவர்ந்த
மணிவாய்க் கள்வ னென்றுகட்டி

யுன்னிப் பொருமி யழவடித்த
துண்டே லவர்கள் விளையாடும்
ஒளிர்நித் திலவெண் மணற்சிற்றில்
உனக்கின் றளிக்க முறைகண்டாய்

கன்னிக் கமுக மிடறொடியக்
காய்க்கும் பசுங்காய்க் குலைசிதறக்
கதலிக் குலங்க ளடிசாயக்
கயல்பாய்ந் துகண்டு வாலறையுஞ்

சென்னல் பழனத் திருப்பேரைச்
செல்வா சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே.

86. பண்ணே றியமென் குதலைமொழி
பவளக் கனிவாய் குறுநகையும்
பாரித் தோங்கிப் பூரித்த
பைம்பொற் புயமுங் கண்டழகு

கண்ணே றெளியேம் பட்டனமென்
றெண்ணிக் கருத்து வேறுபடக்
கணக்கன் றுலகின் மன்னுயிர்க்குப்
காவற் கடவுள் நீயன்றே

மண்ணே ழையுமுண் டுமிழ்ந்தளந்த
மாலே வேலைப் புனல்சுவறி
மறுகக் கணைதொட் டிடுமுகுந்தா
வருணன் திருவா ராதனைசெய்

தெண்ணீர்ப் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
தெளிக்கும் தமிழ்த்தென் திருப்பேரை
செல்வா சிற்றில் சிதையேலே."

87. தடிக்குஞ் சிகரப் படாம் பொதிந்த
தட்மா முலைக்குங் குமச்சுவட்டுத்
தழைக்குங் குறுங்கண் சுரந்தொழுகித்
தருபா லசோதை மகிழ்ந்தூட்ட

குடிக்கும் புயலே யிலங்கையில் வெங்
கொடும்போ ராக்கர் குலக்கூற்றாய்க
குனிக்குஞ் சிலைக்கைத்தடங்களிறே
கோவே பசுந்தண் டுழாய் மாலை

முடிக்கும் பெரும் முத்தொழிற்கு
மூவா முதலே யழியாத
முத்திக் கொருவீத் தாகவந்து
முளைக்கும் பொருளே பாகுபெற

வடிக்கும் தமிழ்த்தென் திருப்பேரை
மாலே சிற்றில் சிதையேலே
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே சிற்றில் சிதையேலே."

88. கொத்தோ டசையப் பசுந்துளவங்
குடக்கூ டரும்பி முளைத்தெழுந்து
கொழிக்குந் தவளப் பிறைநுதலில்
குறுவேர் வொழுக வணிந்தசுட்டி

முத்தா னதுவெண் ணிலவெறிப்ப
முகத்தா மரையின் நகையிலங்க
முதுகுண் டலமும் வார்காதும்
முழுமா மணிப்பொற் சோதிவிட

அத்தா வருணன் தினம்பரவும்
அரிகே சவநா ரணமுகுந்த
அடல்வா ளரவிற் கண்டுயிலும்
ஆழிப் புயலே ஆய்ச்சியர்கை

மத்தா லடிப்ப வெண்ணெ யுண்ட
வாயா சிற்றில் சிதையேலே
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே சிற்றில் சிதையேலே."

89. அன்போ டணைத்து முலை கொடுத்தின்
அமுதூற் றிருக்கும் புனலாட்டி
அருங்கண் கடைக்கஞ் சனம்தீட்டி
ஆரம் திருத்திப் பட்டுடுத்தி

உன்பே ரிடுவே னெனக் குழவிக்
குள்ளத் தயவாற் றனிசமைத்த
உயர்மாளிகையும் ஆடரங்கும்
ஒளிர்வே திகையும் நீயழிக்க

வன்பா லோடி வரவுனக்கு
வழக்கன் றுலகிற் சிறுபேதை
மகளிரிருந்தும் விளையாடும்
வண்டல் துகட்சே வடிபடுமே

தென்பே ரையின்நங் குலநாத
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே."

சிறுபறைப் பருவம்

90. வானாரு முப்பத்து முக்கோடி யுஞ்சது
மறைக் கடவுள் நான்முகவனும்
மழுவலா ளனுமறு முகச்செம்ம லுங்கைம்
மலைக்கோட்டு வேழமுகனும்

ஏனோரும் வச்சிரக் குலிசபதி யும்மகிழ்ந்
தெண்டிசா முகபாலரும்
இருவிழியு மிருசெவியு மிதையதா மரைமலரும்
எக்கால முந்தழையவே

கானூறு பச்சைப் பசும்பூக மடல்விண்டு
கக்கும் கொழும் பிரசமும்
கதலிக் கொழுங்கனி யுடைந்து வழிமதுவும்
கலந்தோடி யலைமண்டியத்

தேனாறு பாயும்வயல் சூழ்வழுதி நாடனொரு
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்
சிறுபறை முழக்கியருளே.

92. கறைகெழுமு சமரில்வடி வாளொரீஇ இராவணன்
கைகளிரு பதும் விழுவதுபோல்
காறுடர் மண்ணில்வீழ் குப்புற்று நிற்குநிலை
கண்டுதிரு வுளமிரங்கி

உறுதிபட வின்றுபோய் நாளைக்கு வாவென்
றுரைத்தராகவ வெருவியன்
றோரானை மூலமென் றோதாமு னோடிவந்
துதவுமா தவசீதர

நறையொழுக மடன்முக முறுக்கவிழ்ந் தலருமொழி
நளினப் பொகுட்டாசன
நள்ளிடை வதிந்துபைந் தாதளைந் திசையாழி
நாகிளம் பேடையோடுஞ்

சிறைவண்டு கண்படுக் கும்வழுதி நன்னாட
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேவைரு நங்குழைக் காதவொரு
சிறுபறை முழக்கியருளே.”

93. அண்டபகி ரண்டமு மதிர்ந்துகுல வரையேழும்
அசையாமல் எண்டிசைதொறும்
ஆழிகவுட் கம்புக் கடாக்களிறு நிலைபெயர்ந்
தடிச்சுவ டெடுத்திடாமற்

கொண்ட வடவைக்கனல் கண்பிதுங் கக்கொடுங்
கோளரா வுடல் முடங்கக்
குலுங்காம லாமைநெடு முதுகுளுக் கலுமண்ணில்
கோளகையின் முகடுவெடியா

விண்டடவு தாரகைக் குலமடங் கலுமண்ணில்
வீழாமல் உயர்செழும் பொன்
மேருகிரி சாயாமல் ஓடியிரு கரைதொறும்
வெண்ணிலா வுமிழுமுத்தம்

தெண்டிரை சுருட்டுபொரு நாநதி நெடுந்துறை
சிறுபறை முழக்கியளே
தென்திருப்பேரைவரு நங்குழைக் காதவொரு
சிறுபறை முழக்கியருளே."

94. கங்கா நதிச்செழும் புனல்யமுனை சரசோதி
கற்பூர சுவை மணக்கும்
காவிரி யெனத்தேவர் வடியிட்ட வமுதெனக்
கமழுந் திருப் பொருநையும்

மங்காத சதுமறைக் குரியவேள் வியும்விழா
வணியம்மக வொலியு நாளும்
வளமைபெறு குலநாத பரமபத விடாள
வயல்கடொறும் வாய்மடைதொறும்

சங்கார வாரங்செய் தகடுளைந் தலறித்
தவழ்ந்தேறி முத்துயிர்க்குந்
தண்ணந் தடத்தாய மரைப்பொகுட் டாசனத்
தமனியப் பொற்கோவிலிற்

செங்கா லனந்துயிலும் வழுதிவள நன்னாட
சிறுபறை முழக்கி யருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதவொரு
சிறுபறை முழக்கியருளே.

95. பொருதிரை யெறிசல ராசியுடுக்கும்
புவனத் திருமாதும்
பொங்கு சினந்தலை மண்ட வடுஞ்சமர்
புக்கெதிர் வருவோர் செங்

குருதி படும்படி பொருது மணம்புணர்
கொற்றக் குலமாதும்
கோதறு வண்புகழ்ச் சேரனு கூலக்
கோமள மாமாதும்

மருமலி சததள மண்டப மீது
மகிழ்ந்துறை பூமாதும்
வடகலை தென்கலை முழுது முணர்ந்தசொன்
மங்கையும் நாடோறும்

திருவுளம் கிளர்தர வழுதி நன்னாடன்
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல நாதன்
சிறுபறை கொட்டியருளே."

96. உழுதுழு திசைபயில் அளியொரு கோடி
உதைந்து துதைந்தாட
ஒளிர்மடன் முகையவிழ் துளவணி மால்குரு
கூரனு வந்தோதும்

பழுதறு முதுதிரு வாய்மொழி நூல்செவி
பற்பல புகுநேயன்
பண்டுல கங்களை யுண்டுபி னளவு
படுத்துந் திருமாலால்

முழுமறை முறையிடு மிருசரணா லையன்
மூரிக் கயமூடு
முதுபுன லோடையு மகழியும் வாள்வளை
மொய்க்கும் கழனியினும்

செழுமலர் மணமலி வழுதிநல் நாடன்
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல நாதன்
சிறுபறை கொட்டுகவே.”

97. புவனமு மண்ட கடாகமும் வேலைப்
புணரித் திசையெட்டும்
பொங்கழல் கதுவிய கண்களி யானைப்
புகர்முக மலையெட்டும்

குவடு படும்பொலன் வடவரை முதலாம்
குலகிரி யோரெட்டும்
கொடுவிட முடவுடல் பஃறலை மகுடக்
கோளர வோரெட்டும்

தவமுனி வர்சுரா மகபதி முக்கட்
சடைமுடி யுடையோனுஞ்
சதுமுகன் அறுமுகன் ஒருகொம் பேந்திய
தந்தி முகத்தோனும்

செவிகுளி ரத்திரு வழுதிநல் நாடன்
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல நாதன்
சிறுபறை கொட்டுகவே."

98. "அளிசுற்றிய தண்டலைப் பொதியத்
தருஞ்சாரலிற் பைங்கிழங் கெடுக்கும்
அம்பொற்குழி யிற்சுடர் விரிக்கும்
அருங்கால்உயி ரங்கிடந் திமைப்பத்

துளிபட்டொழு கும்வரை யருவி
சுழிக்குந்தோறும் பொன்னொமுக் கெறியச்
சுவையூற் றிருக்கும் புனற்பொருநை
சுருட்டுந்திரை செம்மணி கொழிப்பத்

தளைவிட்டல ரும்பசும் பாளைத்
தலைப்பூங் கமுகமணி மிடற்றுத்
தாங்கும்பவ ளக்குலை கவிப்பத்
தடஞ்சால்வழி யூர்ந்தக டுளைந்து

வாளைமுத்துயிர்க் கும்வயற் பேரை
மாலே சிறுபறை கொட்டுகவே
மகரக்குழை யேநூற் றெண்மர்
வாழ்வே சிறுபறை கொட்டுகவே."

99. நீறுபடு தவளவெண் பொடியாட வார்சடை
நெடுந்திரைக் கங்கையாட
நிலவாட முகைமுறுக் கவிழ்தும்பை யாடஅரன்
நின்றாட அமரராடப்

பாறுபடு நெட்டிலைச் சுடர்வேல் விடுங்கொடும்
படையிரா வணன் மகுடமோர்
பத்துற் தகர்ந்தாட வெம்பேய் குறும்பேய்
பறந்தலைக் கவந்தமாடத்

தாறுபடு கதலிக் கொழுங்கனி யுடைந்துவழி
சாறுமாங் கனியின் நறவும்
தருமுடப் பலவின்நற் கனியுடைத் துப்பெருகு
தண்நறவும் அலை மண்டியே

சேறுபடு பழனவயல் சூழ்வழுதி நாடனொரு
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்
சிறுபறை முழக்கியருளே."

சிறுதேர்ப் பருவம்

100. உரைக்குஞ் சதுமா மறை தனக்கும்
உயர்வா னவர்க்கு மெட்டாத
உண்மைப் பொருளே கன்றொடுகுன்
றுருகும் படிவேங் குழலூதி

நிரைக்கும் பின்னே நடந்தருளும்
நீலப் புயலே போரேறே
நிமலா சமரா டிடுங்கொடிய
நிருதர் குலத்துக் கொருகூற்றே

வரைச்சந் தகிலும் செம்மணியும்
மதவா ரணக்கிம் பரிமருப்பும்
மயிற்பீ லியும்வெண் நிலத்திலமும்
வாரிச் சுருட்டிக் கரைபொருது

திரைக்குந் திரைத்தண் பொருநைநதிச்
செல்வா தடந்தே ருருட்டுகவே
தென்பே டையின் நம் குலநாதா ...
செம்பொன் தடந்தே ருருட்டுகவே."

101. மேல்பால் முளைக்கும் பிறையெயிற்று
வெங்கண் கொடிய நிருதர்குழாம்
வெல்லுந் தடக்கைச் சிலை ராமன்
விரிதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்

பாலா டரவிற் கண்டுயிலும்
பசுந்தரர்க் குழகன் கஞ்சனவிடு
பாரச் சகடு மருதுமொடி
படத்தாள் நெரிக்கும் ஒருமுகுந்தன்

கால்பாய் புனலிற் கேணியினிற்
கழுநீர்க் குழியில் வாய்மடையில்
கருஞ்சேற் றனில்நல் அருங்கயத்திற்
கமழ்பூந் துறையில் வெகுண்டெழுந்து

சேல்பாய வழுதித் திருநாடா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே
தென்பே ரையின்நம் குலநாதா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே

102. உருவா யுயிரா யுணர்வாகி
உள்ளும் புறவை முளனாகி
உரைக்கும் சமயம் ஆறினுக்கும்
ஒன்றும பலவு மாயடங்கி

அருவாய் நிறையும் நின்பெருமை
ஆர்க்குந் தெரிய வசமன்றே
ஆழிப் புயலே யருட்கடலே
அரிகே சவசீ தரமுகுந்தா

மருவார் பொழிலில் கேணியின் வாய்
மடையில் சுழியில் படுவரம்பில்
வளைமுத் தீனுந் திருவழுதி
வளநாட் டுறையெம் பெருமானே

தெருவீ தியின்நூற் றெறண்மர் தொழச்
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே
தென்பே ரையின்நம் குலநாதா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே."

103. அன்பாற் பணியத் தினம் வருணன்
ஆரா தனைகொண் டருள்முகுந்த
அடியா ராசைப் புரிமுறுக்கி
அரும்பொற் கயற்று வடம்பூட்டி

வன்பால் விடுத்து நெகிழ்ந்த நெஞ்சம்
மணிவீ தியினள் ளிடைநினைந்து
வந்து ததிய ரிருமருங்கும்
மகிழ்ந்து முறையே பிடித்திப்பப்

பொன்பாற் பொருந்துஞ் செழுந்திலகம்
புவனித் திருவாள் நுதல்திலகம்
பொங்கிப் பரந்த சலராசி
புடைசுற் றியபூ லோகத்துத்

தென்பால் திலத மெனும் பேரைச்
செல்வா தடந்தேர் உருட்டுகவே
செழுந்தார்த் துளவு மணங்கமழும்
தேவே தடந்தேர் உருட்டுகவே."

104\. தருநீழ லிடையினிது வீற்றிருக் கும்புரந்
தரனு முனிவரரு முளரிச்
சதுமறைக் கடவுளும் முக்கட் கொழுங்கனிச்
சடைமுடிச் சிவனும் வெஞ்சூர்

பொருகிரண வேலுடைப் பரமன்முரு கேசனும்
புகர்முகத் தவனு மதியும்
பொங்குளைப் பச்சைப் பசும்பரவி யேழ்கட்கு
பொற்றடந் தேரிரவியும்

பெருவாச றைபுக நெருக்குண்டுசென்னதிப்
வேறுண்டு கிட்டுமென்றே
பிறங்குபொற் கருடக் கொடிக்கம்கம் வலம்வந்து
பெருகவஞ் சலிசெய்திடத்

திருமேனி மண்டபத் தரசிருக் குங்கடவுள்
சிறுதே ருருட்டியருளே
தென்திருப் பேரைவரு நம்குழைக் காதமுகில்
சிறுதே ருருட்டியருளே.”

105. தந்தா னெனக்கு வரமிரண்டும்
தலநா ளுரைத்த சொற்படிக்குன்
தகப்பன் புரந்த முறை தருமம்
தழைப்ப வொருகோ லோச்சி யெங்கும்

'நந்தா வளமைப் பரதனிந்த
நாடா ளுவன்நீ காடாள
நடவென் றுரைத்த சிற்றவை சொல்
நீமேற் றலைகொண் டொருப்பட்டுக்

கொந்தார் குழலி சனகியொடுங்
கூடப் பிறந்த விளவலொடும்
கொதிக்கும் பரல்வெங் கானகம்போய்க்
குறுகும் பொழுதுங் குளிர்ந்தலர்ந்த

செந்தா மரைபோல் திருமுகத்துச்
செல்வா தடந்தேர் உருட்டுகவே
தென்பே ரையின்நம் குலநாதா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே."

106. மத்தா லடிப்ப உரல்மிதித்து

மலர்த்தாள் குந்திட்டு றியில் வெண்ணெய்

வாரிக் களவி லுண்டமணி

வாயா பரம பதந்தனக்கோர்

வித்தா கவும்வந் தங்குரிக்கும்

வேதப் பொருளே யருட்கடலே

விரைநா றியபூம் பசுந்துளவ

மெய்யா பொருவெங் கரிமருப்பு

முத்தோ டகிலுஞ் செம்மணியும்

மூரித் திரைபாய் சுருட்டிமிக

முழங்குங் கூடுபுனல் துறைவ

முதுவாள் அரக்கன் தலைகள் பத்துங்

கொத்தோ டீவஞ் சுருவாளி

கொடுக்குந் தடந்தேர் உருட்டுகவே

கொழிக்கும் தமிழ்த்தென் திருப்பேரைக்

கோவே தடந்ததேர் உருட்டுகவே."

107. புழைத்திண் திறல்கை மதசலதி
பொழியும் பிறைக்கிம் புரிக்கோட்டுப்
புகர்மா விடங்கர்க் குடைந்து வெரி இப்
புதுப்பூங் கேணித் தடம்புனல் நின்

றழைக்கும் புயலே நெட்டரவின்
ஆடும் குழகா வொருநாளும்
அழியாப் பரம பதந்ததியர்க்
கருள்சீ தரமா தவமுகுந்தா

மழைக்கொந் தளகக் குரும்பைமுலை
மதிவா ணுதற்சா னகிபொருட்டு
மதில்சூழ் இலங்கை அரக்கன்மணி
மகுடஞ் சிதறக் கோதண்டங்

குழைக்குந் தடக்கை ரெகுராமா
கொடிஞ்சித் தடந்தேர் உருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் திருப்பேரை
கோவே தடந்தேர் உருட்டுகவே."

108. வாலப் பிறைவாள் நுதல் மடவார்
மலர்க்கை வளைகீழ் விழத் தொழுவோர்
மாறாப் பிறவி வேரோடி
வானத் தமரர் களிகூரச்

சாலப் பொரும் வாழ் அசுரர்படத்
தருமா தவர்கள் கொண்டாடத்
தருமந் தழைப்பப் புகழ்க் கவிதைத்
தமிழ்நா வலவர் ஈடேற

ஏலக் குழல்சா னகிகழுத்தின்
இடுமங் கலநாண் வாழ்வேற
எக்கா லமும்நூற் றெண்மர்குழாம்
இதயத் திருந்து மகிழ்கூர்ந்து

கோலத் தெருவில் விளையாடிக்
கொடிஞ்சித் தடந்தேர் உருட்டுகவே
கொழிக்கும் தமிழ்த்தென் திருப்பேரைக்
கோவே தடந்தேர் உருட்டுகவே."

109. மருவார் நறுமென் மலர் கொணர்ந்து
வணங்கி இருசே வடிசொரிந்து
மயங்கும் புலன்கள் ஐந்து மொன்றாய்
வருணன் செயும்பூ சனையுவந்த

திருமா முகிலே தமிழ்க் குருகுஞ்
செல்வக் குழகா பாட்டயர்ந்து
சிறைவண் டலம்பிக் கண்படுக்குந்
செழுந்தார்த் துளவப் புயமுகுந்தா

அருநான் மறைநூற் றெண்மரும் வந்
தங்கீ கரித்து வடம்பிடிப்ப
அம்போ ருகப்பூந் திருவும் முந்நீர்
அவனித் திருவும் மருங்கிருப்பக்

குருமா மணிப்பொன் மறுகின் நெடுங்
கொடிஞ்சித் தடந்தேர் உருட்டுகவே
கொழக்குந் தமிழ்த்தென் திருப்பேரைக்
கோவே தடந்தேர் உருட்டுகவே.”

செய்யுள் முதற்குறிப்பகராதி

அஞ்சிறைய	7
அடங்காத	43
அடியாற்	37
அண்ட	93
அமரர்	41
அரமகளிர்	40
அருமை	69
அலைவளை	29
அளிசுற்றிய	98
அறுகால்	22
அன்பாற்	103
அன்போடு	89
ஆரணப்	10
ஆராவமுதம்	68
இடிக்கும்	33
இடையில்	36
இருகுழையும்	23
இருவினை	71
உடுக்கும்	46
உருவாய்	102
உரைக்கும்	100

உலைவளை	54
உழுதுழு	96
உளநெகிழ்	64
ஊருக்கு	3
எத்திக்கும்	27
எரிமனல்	61
என்னென்று	79
ஒள்ளொளி	25
கக்கக் கொழும்	48
கங்கா	94
கயங்கொண்டு	30
கருது	34
கருணை	38
கலைமணந்து	63
களிக்குஞ்	80
கறைகெழு	92
கிட்டாப்	2
கூறருந்	75
கொத்தோடு	88
கொந்தார்	12
கோவே	84
சந்தப்	76
சந்தன	24
சந்தா	59

சிறிய	17
சிந்தாமணியே	67
சுடர்விடு	1
செங்குருதி	74
சொல்லற்	35
சொற்ற	50
சொற்றோறுந்	5
தடிக்குஞ்	87
தந்தான்	105
தருக்கா	83
தருழில்	104
தவநெறி	71
தழைமடற்	51
தாதவிழ்	28
துளிக்குந்	58
தெளிக்கும்	11
நிரையும்	26
நீருபரு	99
படநடுங்	49
பண்டா	15
பண்டாலிலை	66
பண்ணார்	31
பண்ணே	86
பம்புதிரை	55

பாரரா 9
புவனமும் 97
புழைத்திண் 107
பூமாது 6
பூவருங் 91
பொங்குவெண் 56
பொருதிரை 53
பொருதிரை 95
மண்டுதிரை 44
மண்மகளும் 8
மத்தால் 106
மதியுடை 70
மருவல்லி 4
மருவார் 109
மானவே 47
முடிக்கும் 18
முடிம்தொளிர் 65
முதியகவி 19
முருகொழுகு 21
முளைக்குந் 32
முனியுமிளம் 52
மூவா முதலா 57
மேல்பால் 101

வ

வச்சிரக்	16
வண்ணந்	45
வள்ளவாய்	13
வள்ளை	82
வன்னக	85
வாலாப் பிறை	108
வானாடரும்	20
வானாரும்	90
விடங்காலும்	14
விடவாள்	39
விண்டடவி	78
விதுரன்	60
வெவ்வார்	72
வேண்ட	81
வேதங்கள்	42

துணைநூற்பட்டியல்

வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.

கலைக்களஞ்சியம் தொகுதி ஏழு, தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியீடு, சென்னை, 1959.

தமிழ் இலக்கிய வரலாறு, மது. ச.விமலானந்தம்.

தமிழ் இலக்கிய வரலாறு, தமிழண்ணல்.

தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர் மு. வரதராசனார்.